**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

வியாசரும் வியப்புறும், தருமத்தின் சொரூபமே !

அறநெறியில் வழுவாது வாழும் அன்புச் சுரங்கமே !

அகிலமே எதிர்பார்க்கும் அறிவுப் பெட்டகமே !

அறுபத்து நான்கும் கற்றுணர்ந்து அரங்கனின் பேரொளியாய்

அறவழியில் அரசாளும் அன்னைத் திருமகளே!

இப்பாரின் பதிமூன்றாம் ஆழ்வாரே!

நாளைய தேசத்தை ஆளக் காத்திருக்கும் பாரதத்தின் ஆள்வாரே!

உழைப்பதில் தேனீ! உதவுவதில் ஏணி !

உழல்பவருக்குத் தோணி ! உதவிகள் சுரக்கும் கேணி!

உலகமே வியந்து போற்றும் ஞானி !

**அம்மா**!

நாளைய காந்தி தேசத்தை சுழல வைக்கப் போகும் அச்சாணி என்பதைச் சொல்லி,

அலையையும், வலையையும் இவற்றோடு இரட்டை இலையையும் தவிர வேறெதுவும் அறியாத எளியவன் என்னை இப்புனித மிகுந்த இப்பேரவைக்கு உறுப்பினராக்கியும், மீன்வளத் துறைக்கு அமைச்சராகியும், நாகை மாவட்டக் கழகச் செயலாளர் என உயர்வு தந்த தாயே !

பாய் மரம் ஓட்டும் பாமரன் எனக்கு பதவிகள் பல தந்து பாசம் காட்டும் அன்னையே!

**“ சரித்திரங்களில் முடி சூட்டுவிழாக்கள் நடைபெறுவதுண்டு.**

**ஆனால், சரித்திரத்தையே முடிசூட்டிக் கொண்ட பெருமை பெற்றவர் ”**

நமது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித்தலைவி **அம்மா** அவர்களின் பாத மலர்களில் எனது நன்றி கலந்த வணக்கங்களை சமர்ப்பித்து, மீன்வளத் துறை சார்ந்த மானியக் கோரிக்கைக்கு பதிலுரைக்க விழைகிறேன்.

**அம்மா** என்னும் சொல்லுக்கு நிகரேது?

இறைவன் தான் படைத்த உயிர்கள் அத்தனையையும் தானே நேரிடையாக காக்க இயலாது என்பதால்தான்

**அம்மா** என்னும் உறவைப் படைத்தான்.

தமிழக மக்களின், ஏன்?

இந்திய மக்களின் ஒப்பற்ற தாயாக நின்று,

**உருவினிலே எளியோராய் வாழ்ந்து**

**உலகோரின் உள்ளத்தில் உயர்ந்து ,**

**எல்லோரும் போற்றிடும் நற்குணம் கொண்டு,**

**சொல்லில் அடங்கா செயல்திறன் கண்டவர்தான்**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி **அம்மா** அவர்கள்.

**“ ஒப்பாரும் மிக்காரும் அவருக்கில்லை.**

**முப்பாலைப்போல் அவர் புகழுக்கு எல்லை இல்லை.**

**தப்பாமல் அவர் புகழை உலகம் சொல்லும்**

**தவறாமல் என்றும் அது காலத்தை வெல்லும் ”.**

இப்பெருமைமிகு இம்மாமன்றத்தில் மூன்றாம் முறையாக மீன்வளத் துறையின் மானியக் கோரிக்கையின்மீது பேசுவதற்கு வாய்ப்பு தந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி **அம்மா** அவர்களின்

பொற்பாத கமலங்களுக்கு என் நன்றி கலந்த வணக்கத்தை காணிக்கையாக்கி எனது உரையைத் துவங்குகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே,**

நிலத்தின் வகையில் கடலும், கடல் சார்ந்த இடமும் நெய்தல் எனப்படும்,

நிஜத்தில் பாசமும், பண்பும் சேர்ந்த அரசு நம் **அம்மா** வின் அரசு.

"**திரைகடல் ஓடியும் திரவியம் தேடு**" என்பது பழமொழி.

திரைகடல் உள்ளே முத்துகளையும் மீன்களையும் தேடு என்பது

மீனவர்களின் வாழ்வியல் மொழி.

**ஆர்ப்பரிக்கும் கடல் இயற்கை தந்த கொடை— அதில்**

**கடலோடும் மீனவர்கள் , நாட்டு மக்களுக்கு உணவளிக்கும் படை.**

அவர்களின் தொழிலுக்கும் , உயிருக்கும் , ஏன்? சுனாமி போன்ற இயற்கை

சீற்றங்களின் பேரழிவால் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கும் போதெல்லாம்

**“ சித்திரை மாதத்து ஓடையைப்போல்**

**நம்பிக்கை வற்றிப்போன மீனவ மக்களை**

**தாயினும் சாலப்பரிந்து**

**தட்டினாலும் திறப்பதில்லை, கேட்டாலும் கொடுப்பதில்லை**

**என்று இருப்பவர்களின் மத்தியில்,**

**கேட்காமலேயே கொடுப்பதை லட்சியமாகக் கொண்டு**

**பல்நோக்குத் திட்டங்களை தக்க தருணத்தில்**

**அட்சயபாத்திரமாய் அள்ளி, அள்ளி வழங்கி வருவது ”**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி **அம்மா** அவர்களின் அரசு.

“ ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் கர்நாடகாவை ஆண்ட அய்சாள மன்னர்கள் காவிரியின் குறுக்கே அணைகட்டியதால் தஞ்சை தரணி வறண்டது. அப்போது இராஜராஜ சோழன் படையெடுத்து கர்நாடக மன்னர்களை வெற்றிக்கொண்டு அவர்கள் கட்டிய அணைகளை உடைத்தான் என்கிறது வரலாறு.

இதை அடிப்படையாகக் கொண்டு இராஜராஜ சோழனை

**"பொன்னியின் செல்வன்"**

எனக் கொண்டாடி காவியம் படைத்தார் கல்கி.

இன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி **அம்மா** அவர்கள்,

**"வான்பொய்ப்பினும் தான் பொய்யா காவிரியை"**

மீட்டெடுக்க உண்ணாநிலைப் போராட்டம் முதற்கொண்டு உச்ச நீதிமன்றம் வரை சட்டப்போராட்டம் நடத்தி வெற்றி கண்ட மாண்புமிகு புரட்சித்தலைவி **அம்மா**

அவர்களே,

காவிரியில் தமிழகத்தின் உரிமையை மீட்டெடுத்து

டெல்டா விவசாயிகளின் வாழ்வுக்கு உத்திரவாதம் தேடித்தந்துள்ள

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி **அம்மா** அவர்களை

காவிரி டெல்டா பாசன விவசாயிகள்

" **பொன்னியின் செல்வி** " என்று கொண்டாடுகிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

**எளிய தாய், வலியதாய், அரியதாய், வணக்கத்திற்குரியதாய்,**

**மலர்ந்த தாய், கனிந்ததாய், மனதிலே நிறைந்ததாய், என்றுமே இனியதாய்**

**தமிழக மீனவ மக்களை வாழ்விக்க வந்த எங்கள் அன்புத்தாயே,**

நீங்கள் நிறைவேற்றிய திட்டங்களால் கடலை நம்பி வாழும் மீனவ மக்களின் கண்ணீர் துடைக்கப்பட்டு, அவர்களின் காவல் தெய்வமாக மாறி அவர்கள் வாழ்வில் நீங்கா இடம் பெற்று விட்டீர்கள் **அம்மா.**

மீனவர்களின் நலனை எப்பொழுதும் பேணிப்பாதுகாக்கும் பணியை தனது இதயத்தில் இறுத்தி செயல்பட்டுவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி **அம்மா** அவர்கள்.

மீனவ மக்களின் வறுமைக்கு முற்றுப்புள்ளி வைத்து,

மூன்றாம் முறையாக ஆட்சிப் பொறுப்பேற்றவுடன்,

முதலில் கையெழுத்திட்ட ஏழு கோப்புகளில்

மீன்பிடித் தடைக் காலங்களில் மீனவக் குடும்பங்களுக்கு

வழங்கப்பட்டு வந்த நிவாரணத் தொகையை

ரூபாய் 1000- த்திலிருந்து ரூபாய் 2000-மாக உயர்த்தி

வழங்க உத்திரவிட்ட கோப்பும் ஒன்றாகும்.

2012-13-ம் ஆண்டிற்கு 1.60 லட்சம் மீனவ குடும்பங்கள் பயன்பெறும் விதத்தில் மீன்பிடித் தடைக்கால நிவாரணத் தொகையாக ரூ.32 கோடி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

**“ கருணை என்பது கண்களிலிருந்து ஊறுகின்ற உணர்வு அல்ல. அது இதயத்திலிருந்து கசிய வேண்டும் ”.**

அதனால்தான், மாண்புமிகு புரட்சித்தலைவி **அம்மா** அவர்கள், இந்தியாவிலேயே முதன்முறையாக புயல் வெள்ளக்காலங்களில் ஒவ்வொரு மீனவ குடும்பத்திற்கும் ரூ.4000 வழங்கும் ஒரு சிறப்பு நிவாரணத்திட்டத்தை அறிமுகப்படுத்தி, 1.70 லட்சம் கடல் மீனவ குடும்பங்களுக்கு ரூ.68.05 கோடி

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி **அம்மா** அவர்களின் அரசால் ஒப்பளிக்கப்பட்டு 11 கடலோர மாவட்டங்களைச் சேர்ந்த 1.13 லட்சம் கடல் மீனவ குடும்பங்களுக்கு இதுவரை ரூ. 45.38 கோடி நிவாரணத் தொகையாக பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது.

மீதமுள்ள திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த கடல் மீனவ குடும்பங்களுக்கு இம்மாதம் முதல் நிவாரணத்தொகை வழங்கப்பட்டு வருகிறது.

இந்த நிவாரணத் தொகை அனைத்தும் பயனாளிகளுக்கு நேரிடையாக விரைந்து சென்றடையும் வகையில், எவ்வித முறைகேடுகளும் நடைபெறா வண்ணம் மின்னனு பரிவர்த்தனை வாயிலாக பணப் பட்டுவாடாவை அறிமுகப்படுத்தி சாதனை படைத்துள்ளது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி **அம்மா** அவர்களின் அரசு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

சுவாமி விவேகானந்தர் ஒருமுறை இரயில் பயணம் செய்து கொண்டிருந்தார். அப்போது, அவர் புத்தகத்தை ஒவ்வொரு பக்கமாக புரட்டிக் கொண்டுவந்தார். இதை கவனித்த உடன் பயணித்த நபர்கள் இருவர் இப்புத்தகத்தை இவர் உண்மையில் படிக்கவில்லை. படிப்பதுபோல் காட்டிக் கொள்கிறார் என பேசிக் கொண்டனர். இதைக்கேட்டுக் கொண்டிருந்த சுவாமி விவேகானந்தர், தன்னிடமிருந்த அப்புத்தகத்தை அவர்களிடம் கொடுத்து, எந்த பக்கத்தில் என்ன செய்தி இருக்கிறது என்பதை விளக்கி பல செய்திகளைக் கூறினார். இதனைக் கண்டு அவர்கள் வியப்புக்குள்ளாயினர். பார்க்கும் ஒரு சில நிமிடத்திலேயே அப்புத்தகத்தில் எந்த பக்கத்தில் என்ன செய்தி உள்ளதென்பதை உணரும் திறன் உடையவராக இருந்தார். அதுபோலவே, மாண்புமிகு புரட்சித்தலைவி **அம்மா** அவர்களும் எந்தத் துறையானாலும், அந்தத் துறைகளில் உள்ள சிக்கல்களுக்கு நொடிபொழுதில் தீர்க்கும் திறன் படைத்தவர் மாண்புமிகு புரட்சித்தலைவி **அம்மா** அவர்கள்.

மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே,

பாக் வளைகுடா பகுதியில் உள்ள ராமநாதபுரம், புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த தமிழக மீனவர்கள் தங்கள் வாழ்வாதாரத்திற்காக பல நூற்றாண்டுகளாக பாரம்பரியமாக இப்பகுதியில் மீன்பிடித்து வருகின்றனர். மீன்பிடிப்பில் ஈடுபடும் மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் அத்துமீறி கைது மற்றும் தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறார்கள். இவ்வாறு விரும்பத்தகாத செயல்களில் ஈடுபட்டுவரும் நட்புறவு இல்லாத அண்டை நாட்டின் நல்லெண்ண மற்ற செயல்கள்,

தமிழக மீனவர்கள் மத்தியில்

பெரும் எதிர்ப்பையும் கொந்தளிப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

**“ஏர் உழுகிறவன் இளப்பமானால் எருது மச்சான் முறை கொண்டாடும்.”**

என்பார்கள்.

மத்திய அரசு மௌனமாக இருப்பதால்தானே,

இலங்கை அரசு நம்மை ஏளனம் செய்கிறது.

**“ சாம்பார் சாதம் சாப்பிடும்போது ஒரு புத்தி,**

**ரசம் சாதம் சாப்பிடும்போது ஒரு புத்தி ”**

உள்ளவர்களால் தன் சுய லாபத்திற்காக ஆரம்பிக்கப்பட்ட டெசோவால் இலங்கைத் தமிழர்களுக்கு எந்த நன்மையும் ஏற்படப் போவதில்லை.

ஆனால், உயிரை இழந்தோம், உடைமை இழந்தோம்,

உணர்வை இழக்கலாமா என்று எண்ணிய

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித்தலைவி **அம்மா**

அவர்களால் ,

சட்டசபையில் இயற்றப்பட்ட, ஏழரைக்கோடி தமிழ் மக்களின் ஒட்டுமொத்தமான தீர்மானத்தைக்கண்டு ராஜபக்ஷே நிலைகுலைந்து போயிருக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே,**

**“ சர்க்கரைப் பொங்கலில் இருக்கும் சர்க்கரையானது**

**கண்ணுக்கு தெரியாமல் இழையோடியிருப்பது போல் ”**

இலங்கைத் தமிழர்கள்மீது கொண்டுள்ள அக்கறையானது, மாண்புமிகு புரட்சித் தலைவி **அம்மா** அவர்களின் இதயத்தில் இழையோடியிருக்கும்.

தன்னிச்சையாக பன்னாட்டு எல்லைக் கோட்டினை வகுத்து, அதன் அடிப்படையில் கச்சத்தீவினை இலங்கைக்கு தாரை வார்த்ததை எதிர்த்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி **அம்மா** அவர்கள் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளதை தமிழக மக்கள் அனைவரும் அறிவார்கள்.

27.3.2013 அன்று தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் தாக்கப்படுவது குறித்த சிறப்பு கவனஈர்ப்பு தீர்மானத்திற்கு இம்மாமன்றத்தில் பதிலளிக்கும்போது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி **அம்மா** அவர்கள்.

**“மீனவர்களின் பாதுகாப்பினை இவ்வரசு உறுதி செய்துள்ளது”**

என்று வலியுறுத்திக் கூறியதுடன், காவிரி நதி நீர்ப் பிரச்சினையில் காவிரி தீர்ப்பாயத்தின் இறுதி ஆணையினை மத்திய அரசிதழில் வெளியிட உச்ச நீதிமன்றம் சென்று, உத்திரவு பெற்றது போன்று,

கச்சத்தீவுப் பிரச்சினைக்கும் நிரந்திர தீர்வு காணும் பொருட்டு தகுதி வாய்ந்த சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவித்துள்ளார்கள்.

**மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே,**

சிங்கள கடற்படையினரின் தாக்குதல்

நிகழ்வுகளின் தீவிரத்தினை கருத்தில்கொண்டு,

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி **அம்மா** அவர்கள்,

மே திங்கள் 2011-ம் ஆண்டு முதல் இன்றுவரை 17 கடிதங்கள் வாயிலாக, பல்வேறு நேர்வுகள் குறித்து, மாண்புமிகு பாரதப்பிரதமர் அவர்களுக்கு கடிதங்கள் எழுதி இந்திய அரசு உறுதியான நடவடிக்கைகள் எடுக்கக்கூறி மத்திய அரசின் கவனத்திற்கு கொண்டு சென்றுள்ளார்கள்.

இதில் ஒன்பது கடிதங்கள் சிறைப்பட்ட மீனவர்களை உடனடியாக விடுவித்திடவும் , 8 கடிதங்கள் நடுக்கடலில் தமிழக மீனவர்களின் மீதான தாக்குதலை தடுத்து நிறுத்திடவும்

வலியுறுத்தி கேட்டுக் கொண்டுள்ளார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதமைச்சர் புரட்சித்தலைவி **அம்மா** அவர்கள் எடுத்த நடவடிக்கையின் பயனாக 2011-ம் ஆண்டில் ( மே 2011-ல் ) இருந்து 217 மீனவர்களும் , 2012-ம் ஆண்டில் 219 மீனவர்களும்,

2013-ஆம் ஆண்டில் இன்றுவரை 69 மீனவர்களும்

ஆக மொத்தம் 505 மீனவர்கள் சிறைபிடிக்கப்பட்ட ஒரு சில நாட்களில்

இலங்கை அரசினால் விடுதலை செய்யப்பட்டு தமிழகம் அழைத்து வரப்பட்டனர்.

மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே,

கடந்த 6.4.2013 அன்று ராமேஸ்வரம் மீன்பிடித் தளத்தில் இருந்து 5 மீன்பிடி விசைப்படகுகளில் மீன்பிடிக்கச்சென்ற அப்பாவி மீனவர்கள் 30 பேர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு அனுராதபுரம் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்களை விடுதலை செய்திட துரித நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மாண்புமிகு பாரதப்பிரதமர் அவர்களுக்கு, அடுத்த நாளே அதாவது, 07. 04. 2013 நாளிட்ட கடிதத்தில் , மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி **அம்மா** அவர்கள் வலியுறுத்தியுள்ளார்கள்.

மீனவர்கள் இடர்பாடுகளைச் சந்திக்கும் அனைத்து தருணங்களிலும் மாண்புமிகு முதலமைச்சர் **அம்மா** அவர்கள் மீனவர்களுக்கு உதவியாகவும் துயர் ஏற்படும்போது அவர்களுக்கு ஆதவராகவும் செயல்பட்டு வருவது மீனவ மக்களிடையே மிகுந்த நம்பிக்கையை ஏற்படுத்தி உள்ளது.

**மாண்புமிகு அம்மா அவர்களே, நீங்கள்**

**" கச்சத்தீவை மீட்பேன் என்று சபதமிட்டீர்கள்."**

**அம்மா நீங்கள் சொன்னால் செய்வீர்கள் என்பது சத்தியம்**

மலை பெயர்ந்தும், நிலை பெயரா, மனஉறுதி தங்களுடையது என்பது உலகறியும்.

" **நீரிலே வாழ்கின்ற மீன்கள், நீரிலேயே கொதியுண்டு குழம்புமாகும்** "
என்பதற்கிணங்க, மீன் பிடிக்கச்செல்லும் மீனவர்கள் சிங்களப்படையினரால்
தாக்கப்பட்டு, சுடப்பட்டு, கடலுக்கே இரையாகும் கொடுமையை

வீர மங்கையான தங்களைவிட்டால் வேறு யார் தட்டிக்கேட்பார்கள் **அம்மா.**

**கடலடியில் மூச்சடக்கி, முக்குளித்து, மீன்பிடித்தோம்.**

**வாடிக்கையாய் உள்ளம் உடைந்தோம்....**

**வாழ்க்கை எல்லாம் துன்பம் அடைந்தோம்.**

**முன்னேறும் பாதை ஏது?** என்று முடங்கிக் கிடந்த மீனவர்தம் வாழ்வில்,

கலங்கரை விளக்கமாய் நின்ற ஜோதி சுடர்தான் எங்கள் **அம்மா.**

**மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே,**

**“ நல்ல கேப்டனுக்கு அழகு பயணிகளை**

**தன் உயிரினும் மேலாக மதிப்பது.”**

**அடிப்பதல்ல…..**

தமிழக அரசு என்னும் கப்பல்,

**அம்மா** என்ற தலைசிறந்த கேப்டனால் சரியான திசையில்,

சரியான வேகத்தில், சரியான நேரத்தில் செலுத்தப்பட்டு பயணித்துக் கொண்டிருக்கிறது.

சில நேரங்களில் கடற்கொள்ளையர்களால் ஆபத்து சூழ்ந்தாலும்,

**அம்மா** அவர்களின் பார்வை பட்டால் ஆபத்து மறைந்துவிடும்.

**“ கடல் மாதாவைவிட தங்கள் அன்புமனம் பெரிதம்மா.**

**தாய்மடிபோல் எம்இன மக்களை தங்கள் கண்ணில் வைத்துக் காப்பாற்றுவது ”** அன்றாட நிகழ்வுகள்.

அன்றாடம் ஒலிக்கும் அலைஓசை கூட எங்களுக்கு,

**அம்மா, அம்மா** என்றுதான் கேட்கிறது…. அது,

உங்கள் வெற்றிப்பேரலை ஓயாது என்று சுட்டிக்காட்டுகிறது.

மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே,

வேளாண்மை, கால்நடைப் பராமரிப்பு மற்றும் மீன்வளம் ஆகிய துறைகளை முதன்மைத் துறைகளாக மாற்றிட, முன்னுரிமை அளித்துவரும் மாண்புமிகு புரட்சித்தலைவி **அம்மா** அவர்கள் 2010-11-ஆம் ஆண்டில் ரூ.193.32 கோடியாக இருந்த மீன்வள மேம்பாடு மற்றும் உட்கட்டமைப்புகளுக்கான நிதி ஒதுக்கீட்டினை 2013-14-ம் ஆண்டில் ரூ.467.44 கோடியாக பன்மடங்கு உயர்த்தி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது இதுவரை மீன்வளத்துறை கண்டிராத வரலாற்றுச் சாதனையாகும்.

**" மூச்சு விட்டுக் கொண்டிருப்பவன் எல்லாம் மனிதன் இல்லை**

**முயற்சி செய்துக் கொண்டிருப்பவன் மட்டும்தான் மனிதன் "**

என்பது போல, மாண்புமிகு **அம்மா** அவர்களது பெரு முயற்சியால் தமிழகம், மீன்வள மேம்பாட்டில் முதன்மை மாநிலமாக மாறி உள்ளது.

**" செயற்கரிய செய்வர் பெரியர் "**

என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க செயற்கரிய செயல்களைச் செய்து, சரித்திரமாய் திகழ்பவர்தான் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி **அம்மா** அவர்கள்.

தமிழ்நாட்டில் மீன் உற்பத்தியைப் பெருக்கி,

கடல்பொருள் ஏற்றுமதி அதிகரித்து,

அதன்மூலம் மீனவர்கள் அதிக வருவாய் ஈட்டிடும் வகையில்

எண்ணற்ற பல புதிய திட்டங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

இதயதெய்வம் புரட்சித்தலைவி **அம்மா** அவர்கள் செயல்படுத்தி வருகிறார்கள்.

கடந்த ஆட்சி காலத்தில் மீன்பிடித்துறைமுகம் மற்றும் மீன்பிடி இறங்குதள உட்கட்டமைப்பு திட்டங்கள் அனைத்தும் ஏட்டளவில் மட்டுமே இருந்தது.

“ **தன்பெண்டு, தன்பிள்ளை என்று சின்னதொரு கடுகுபோல்**

**உள்ளம் கொண்ட அவர்களால் ஏட்டளவில்தானே ஏற்றிவைக்க**” இயலும்.

சோதனைகள் பலவரினும், அதனை சாதனைகளாக்கி,

எதுவும் தனக்கென்று எண்ணாமல், கொடுக்கின்ற கோயிலாய்,

தன்னலம் பேணா தகைமையராய் நம்மை வழிநடத்தும்

மாண்புமிகு புரட்சித்தலைவி **அம்மா** அவர்கள் ஆட்சிப்பொறுப்பேற்றவுடன்,

துரித நடவடிக்கையின் அங்கமாக மாநில நிலைக்குழு (State Level Standing Committee) அமைத்து, சம்பந்தப்பட்ட அனைத்துத் துறைகளும் ஒரே நாளில் அமர்ந்து தொடர்புடைய திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்ததன்மூலம்

இதுகாறும் பல மாதங்களாக வீணடிக்கப்பட்ட கால விரயத்தை ஒரேநாளில் முடித்த பெருமை மாண்புமிகு புரட்சித்தலைவி **அம்மா** அவர்களையேச் சாரும்.

**மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே,**

மூன்றாம்முறையாக மாண்புமிகு புரட்சித்தலைவி **அம்மா** அவர்கள் பொறுப்பேற்றவுடன், கன்னியாகுமரி மாவட்டத்தில் ஏற்கனவே ஒப்பளிக்கப்பட்ட குளச்சல் மீன்பிடித்துறைமுகம் ரூ.27.10 கோடியிலும், தேங்காய்பட்டினம் மீன்பிடித்துறைமுகம் ரூ.40 கோடியிலும் கட்டப்பட்டுவந்தது.

இக்கடல் பகுதியில் ஏற்படுகின்ற புயல், வேகமான அலை, கடல் கொந்தளிப்பு, ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு அலை தடுப்புச்சுவர் பாதிப்படையாமல் தடுக்கும் பொருட்டு மத்திய நீர் மின்விசை ஆய்வு நிலையத்தின் (Central Water and Power Research Station) பரிந்துரைப்படி குளச்சல் துறைமுகம் ரூ.87.75 கோடி மதிப்பீட்டிலும்,

தேங்காய்பட்டினம் மீன்பிடித்துறைமுகம் ரூ.97.40 கோடி மதிப்பீட்டிலும், திருத்திய மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மத்திய அரசின் நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டு பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

**" பழங்காலத்தில் உலகத்தின் மற்ற நாட்டவர்கள் கடலைக் கண்டு**

**பயந்து கொண்டிருந்தபோது, கப்பல் கட்டி கடலில்**

**விளையாடியவர்கள் பூம்புகார் தமிழர்கள்.**

**இந்த ஊரில் வாழ்ந்த எவரும் வறுமையின் காரணமாக**

**வேறு நாட்டிற்கு புகார்.**

**அதேபோல், வேறு நாட்டவர் எவரும் படையெடுத்து**

**இந்த ஊருக்குள் புகார்.**

**அதாவது புக முடியாத ஊர் என்பதால்,**

**இந்த ஊருக்கு பூம்புகார் என பெயர் "** வந்ததாகக் கூறுவர்.

நாகப்பட்டினம் மாவட்டத்தில் அமைந்துள்ள அப்பெருமைமிகு பூம்புகார் பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான மீன்பிடித்துறைமுகம் அமைக்க, மத்திய மாநில திட்டத்தின்கீழ் ரூ78.50 கோடி மதிப்பீட்டில் நிதி பெறப்பட்டு **அம்மா** அவர்கள் ஆட்சிப்பொறுப்பேற்ற 20 மாதங்களுக்குள்ளாக போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுத்து மத்திய அரசு மற்றும் தொடர்புடைய துறைகளின் நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

இத்திட்டத்தை செயல்படுத்த ஆரம்ப கட்ட பணிகளுக்காக மத்திய மாநில அரசின் பங்களிப்பாக ரூ.6.67 கோடி நிதி விடுவிக்கப்பட்டு பணிகள் துவங்கும் நிலையில் உள்ளது.

கன்னியாகுமரி மாவட்டம், சின்ன முட்டத்தில் மத்திய மாநில அரசுகளின் திட்டத்தில் மீன்பிடித்துறைமுகம் ரூ.73.52 கோடிக்கு நிதி ஒப்பளிக்கப்பட்டு மத்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்டு பணிகள் துவங்கும் நிலையில் உள்ளது.

இராமநாதபுரம் மாவட்டம், மூக்கையூரில் மீன்பிடித்துறைமுகம் அமைப்பது தொடர்பாக சாத்திக்கூறு ஆய்வுகள் மேற்கொள்ளவும், விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கவும் “ **வாப்கோஸ்** ” என்ற நிறுவனம் ஆலோசகராக நியமிக்க மாண்புமிகு புரட்சித்தலைவி **அம்மா** அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

சென்னை மீன்பிடித்துறைமுக மேம்பாட்டுப் பணிகள் 45 விழுக்காடு முடிக்கப்பட்டு முன்னேற்றத்தில் உள்ளன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!**

**“ கருவியும் காலமும் , செய்கையும் செய்யும்**
**அறிவினையும் மாண்டது அமைச்சு ”**

அதாவது ஒரு செயலைச் செய்வதற்கு வேண்டிய கருவிகளையும், ஏற்ற காலத்தையும், செய்யும் வகையையும், செயலின் அருமையையும், நன்கு சிந்திப்பவரே நல்ல ஆட்சியாளர் என்கிறார் தெய்வப்புலவர் திருவள்ளுவர்.

சென்னை மீன்பிடித்துறைமுகத்தில், தற்போது படகு நிறுத்தும் இடவசதிகள் மற்றும் தேவையான இதர வசதிகள் இல்லாததாலும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித்தலைவி **அம்மா** அவர்கள், 5.4.2013 அன்று சட்டப்பேரவையில் விதி 110-ன்கீழ் சென்னை மீன்பிடித்துறைமுக மேம்பாட்டு பணிகள் ரூ.75 கோடி செலவில் நபார்டு வங்கி நிதி உதவியுடன் சர்வதேச தரத்திற்கு இணையாக மீன்களை சுகாதாரமான முறையில் கையாளுவதற்கான வசதிகள் உருவாக்கப்படும் என்று அறிவித்தார்கள்.

சென்னை மக்கள் யாரும் கோரிக்கை வைக்காமலேயே அவர்களுடைய நீண்டகால எண்ணங்களை உணர்ந்து, எதிர்பார்ப்பினை பூர்த்தி செய்கின்ற வகையில் அறிவிப்பு செய்தது, அரசைத் தேடி மக்கள் என்ற நிலைமாறி மக்களைத்தேடி அரசு என்பதற்கிணங்க நல்லாட்சி நடத்துகிறவர்தான் மாண்புமிகு புரட்சித்தலைவி **அம்மா** அவர்கள்.

சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையில் நபார்டு வங்கி நிதிஉதவியுடன் அறிவிக்கப்பட்ட மொத்தம் ரூ62.95 கோடி மதிப்பிலான 11 மீன் இறங்குதள கட்டுமானப்பணிகள்

நாகப்பட்டினம் மாவட்டம் செருதூர்,

ராமநாதபுரம் மாவட்டம் தேவிப்பட்டினம் மற்றும் ரோஜ்மாநகர், தூத்துக்குடிமாவட்டம் தருவைக்குளம் மற்றம் திரேஸ்புரம்,

கன்னியாகுமரி மாவட்டம் இணையம்புத்தன்துறை, சைமன் காலனி மற்றும் குரும்பனை,

புதுக்கோட்டை மாவட்டம் முத்துக்குடா, மற்றும்

கடலூர் மாவட்டம் சாமியார்பேட்டை ஆகிய இடங்களில் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளது. எம்.ஜி.ஆர். திட்டு இடத்தில் பணிகள் ஆய்வில் உள்ளது.

**மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே,**

உள்நாட்டு மீன்வளமும் மக்களின் உணவு பழக்கத்தில் பெரும் பங்கு வகிப்பதாலும், மிகுந்த புரதச்சத்து இருப்பதாலும், அதை உணர்ந்திருக்கிற மாண்புமிகு புரட்சித்தலைவி **அம்மா** அவர்கள் ஆட்சிப்பொறுப்பேற்றவுடன், உள்நாட்டு மீன்வளத்தை பெருக்கும் வகையில்,

மீன்குஞ்சு உற்பத்திபண்ணைகளின் கட்டுமானப்பணிகளை மேம்படுத்தும் வகையில் நபார்டு வங்கி நிதி உதவியுடன்ரூ.37.05 கோடி மதிப்பில் 12 இடங்களில் முறையே ஈரோடு மாவட்டம், பவானிசாகர்,

பூங்கார் மற்றும் பழைய மீன்பண்ணை

திருநெல்வேலி மாவட்டம் மணிமுத்தாறு, விழுப்புரம் மாவட்டம் வீடுர்

புதுக்கோட்டை மாவட்டம் தட்டான்மனைப்பட்டி,

தஞ்சாவூர் மாவட்டம் நெய்தலூர் தட்டான்குளம் மற்றும் அகரப்பேட்டை,

திருச்சி மாவட்டம் அதூர், கடலூர் மாவட்டம் லால்பேட்டை, காஞ்சிபரம் மாவட்டம் வானியஞ்சாவடி மற்றும் கரூர் மாவட்டம் திருக்காம்புலியூர் ஆகிய இடங்களில் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.

மேற்குறிப்பிட்ட கடல் வளத்திற்கு ரூ.62.95 கோடியும் உள்நாட்டு மீன்வளத்திற்கு ரூ. 37.05 கோடியும் ஆக 100 கோடி ரூபாய் நிதிஉதவியினை நபார்டு வங்கி மூலம் பெற்றுத்தந்த இந்தியாவின் ஒரே முதல்வர் நமது மாண்புமிகு புரட்சித்தலைவி **அம்மா** அவர்கள் மட்டும்தான்.

இவர் பல கோடி மக்களில் தலைசிறந்த ஒருவராக விளங்குகிறார் என்பது நாடறிந்த உண்மை.

**நாடு வளம் பெற,**

**வீடு நலம்பெற,**

**நாளும் உழைப்பவர்**

**ஓடி உழைப்பவர்**

**உலகை நினைப்பவர்**

**வையம் தழைத்திட உழைத்து வாழ்ந்திடும்**

மாண்புமிகு புரட்சித்தலைவி **அம்மா** அவர்கள் மீனவ மக்களின் மனதில் தெய்வமாக வாழ்கிறார்.

இது மட்டுமல்ல …….

**மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே,**

முற்காலத்தில் அன்று வாணிபத்தில் புகழ் பெற்ற **சோழர்குலவல்லிப்பட்டினம்** என்றும், நாகர்கள் வாழ்ந்து வந்ததால் **நாகர்பட்டினம்** என்று புகழ் பெற்றதுதான் இன்றைய **நாகப்பட்டினம்.** அந்த பழம் பெருமையை மீட்டு எடுப்பதுபோல் மாண்புமிகு புரட்சித்தலைவி **அம்மா**வின் ஆட்சியில்தான், நாகப்பட்டினத்தில் மீன்பிடித் துறைமுகத்திட்டம் ரூ.**35.65** கோடி செலவில் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

பன்னெடுங்காலமாய் நம்நாட்டில் ஏற்றுமதி இறக்குமதி சிறப்பாக நடந்தமைக்கு சங்க இலக்கியங்கள் சான்றாகின்றன.

**“ நீரின் வந்த நிமிர்ப்பரிப் புரவியும்**
**காலின் வந்த கருங்கறி மூடையும்**
**வடமலைப்பிறந்த மணியும், பொன்னும்**
**குடமலைப்பிறந்த ஆரமும் , அகிலும்**
**தெறிகடல் முத்தும் , குணகடல் துகிரும்,**
**கங்கை வாரியும் , காவிரிப் பயனும்**
**ஈழத்து உணவும் , காழகத்து ஆக்கமும்**
**அரியவும் பெரியவும் , நெரிய ஈண்டி**
**வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகு”**

என கடல் வழியாக நம்மவர்கள் செய்த ஏற்றுமதி, இறக்குமதி குறித்து பட்டினப்பாலை எனும் இலக்கியம் விளக்குகிறது.

கடல் வழி வணிகத்திற்கு துறைமுகப்பட்டினங்கள் இன்றியமையாதது. கடல் வழி வணிகத்தில் மீன்களும் சிறப்பிடம் பெறுகின்றன. அதனால்தான் மாண்புமிகு புரட்சித்தலைவி **அம்மா** அவர்கள் மீண்டும் ஏற்றுமதி, இறக்குமதி சிறப்பு பெற கடற்கரை நகரமான நாகப்பட்டினத்தில் ரூ. 380 கோடி செலவில் அரசு மற்றும் தனியார் பங்களிப்புடன், எல்லா பருவ நிலைகளிலும் இயங்கக்கூடிய, கப்பல்அணையும் வசதிகள் உள்ள ஆழ்கடல் பசுமைவளத் துறைமுகத்தை ஏற்படுத்த ஆணையிட்டுள்ளார்கள்.

நாகப்பட்டினம் மாவட்டம், பழையாறு மீன்பிடித் துறைமுகத்தை மறுசீரமைக்க ரூ. 27.56 கோடி ஒதுக்கீடு செய்து அதன் பணிகள் 90 விழுக்காடும், திருமுல்லைவாசல் கிராமத்தில் உப்பனாறு முகத்துவாரத்தில் நிரந்தரமாக நிலைப்படுத்த ரூ.5.20 கோடி செலவில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு 60 சதவீதம் பணிகளும் முடிவடைந்துள்ளன.

கடலூர் மாவட்டம் வெள்ளாறு முகத்துவாரம் நிரந்தரமாக நிலைப்படுத்த ரூ.10.24 கோடி செலவில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு 85 சதவீதம் பணிகள் முடிவடைந்துள்ளன.

நாகப்பட்டினம் மாவட்டம் நாகூரில் மீன் இறங்குதளம் ரூ.10.60 கோடியிலும், கடலூர் மாவட்டம் பரங்கிப்பேட்டை அண்ணன்கோயில் மீன்இறங்குதளம் ரூ.13.50 கோடியில் மேற்கொள்ளப்பட்டு பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே,**

மீனவர்களின் வருமானம் உயரவும், அந்நியச்செலவாணி அதிகம் கிடைக்கவும், முறையாக பதப்படுத்தப்பட்ட மீன்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதின்மூலம் பெறமுடியும்.

மீன் பிடித்தலுக்குப் பின், மீன்களை சுகாதாரமாக கையாளும் முறைகளை கடைப்பிடித்திடவும், உலக சந்தைகளின் தரத்திற்கேற்ப பூர்த்தி செய்திடவும், மீனவர்கள் பிடிக்கும் மீன்களுக்கு நல்ல விலையைப் பெற்றிடவும் மாண்புமிகு புரட்சித்தலைவி **அம்மா** அவர்கள் ஆணைப்படி, 13 கடலோர நகரங்களில் மீன் பதனிடும் பூங்காக்களை அரசு-தனியார் பங்களிப்புடன் (PPP) அமைத்திட தொழில்நுட்ப ஆய்வுகள் மேற்கொள்ள “திருவாளர்கள் மகேந்திரா கன்சல்டிங் எஞ்சினியர்ஸ் லிமிடெட்” நிறுவனத்திற்கு மாண்புமிகு **அம்மா** அவர்களால் அனுமதியளிக்கப்பட்டது.

ஆய்வின் முதல் கட்டமாக கடலூர் மாவட்டத்தில், பெரிய கங்கணாம்குப்பம் கிராமத்தில் 1.94 ஏக்கர் பரப்பில் சுமார் ரூ.14 கோடி செலவிலும் நாகப்பட்டினம் நகரம் நாகூரில் 2.19 ஏக்கர் பரப்பில் சுமார் ரூ.23 கோடி செலவிலும் தகுதியின் அடிப்படையில் தனியார் நிறுவனங்கள் தேர்வு செய்யப்பட்டு மீன் பதனிடும் பூங்காக்கள் நிறுவ மாண்புமிகு **அம்மா** அவர்கள் உத்திரவிட்டுள்ளார்கள்.

இரண்டாம் கட்டமாக மாண்புமிகு புரட்சித்தலைவி **அம்மா** அவர்களின் ஆணைப்படி, திருவள்ளுர் மற்றும் ராமநாதபுரம் மாவட்டங்களில் மீன் பதனிடும் பூங்காக்கள் வரும் ஆண்டில் அமைக்கப்பட உள்ளன என்பதை இம்மாமன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே,**

**" கடலில் விழுந்தாலும் கட்டுமரமாகி மக்களை காப்பாற்றுவேன் "**

என்று கதைவிட்டுக்கொண்டிருப்பவர் ஒருவர்.

ஆனால், மாண்புமிகு புரட்சித்தலைவி **அம்மா** அவர்களோ,

தற்போது மீனவர்களுக்கு பெரிதும் தேவையான, ஆழ்கடலில் பலவாரங்கள் தங்கியிருந்து சூறை மீன் பிடிப்பதற்கு ஏற்றவாறு, அப்படகுகளில் பலஅடுக்கு குளிர்சாதனப் பெட்டிகளுடன்கூடிய, விசைப்படகுகளை மாற்றுவதற்காக இதுவரை வழங்கப்பட்டு வந்த ரூ. 5 லட்சம் மானியத் தொகையை உயர்த்தி, ரூ. 60 லட்சம் மதிப்பீட்டில் 50 சதவீதம் அதாவது ரூ.30 லட்சம் வரை மானியமாக உயர்த்தி வழங்க மாண்புமிகு புரட்சித்தலைவி **அம்மா** அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

இந்தத்திட்டம், மீனவர்களின் பொருளாதாரத்தை நிச்சயமாக உயர்த்தும் என்பதும், அதை உயர்த்திக்காட்டுபவர் மாண்புமிகு புரட்சித்தலைவர் **அம்மா** அவர்கள்தான் என்பதில் எந்தவித ஐயப்பாடும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே,**

**“ வெறுங்கை என்பது மூடத்தனம் , விரல்கள் பத்தும் மூலதனம் ”**

என்பதற்கு இணங்க கைகளை மட்டுமே மூலதனமாகக்கொண்டு

வலைவீசும் மீனவ மக்களின் வாழ்க்கைத்தரம் உயர,

ஆழ்கடல் மீன்பிடிப்பான சூறைமீன் பிடிப்பிற்கு தகுந்த நிதி ஒதுக்கி , ஆணையிட்ட

மாண்புமிகு புரட்சித்தலைவி **அம்மா** அவர்களே

மீனவ மக்களின் வயிறு உங்களை என்றும் வாயார வாழ்த்தும்.

**மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே,**

ஆழ்கடல் மீன்வளங்களில் ஒன்றான சூறை மீன் விலைமதிப்பு மிக்க மீனைப் பிடிப்பதற்காக மீன்பிடி விசைப்படகுகள் ஒரு மாதம்வரை தங்குகடல் மீன்பிடிப்பை மேற்கொள்ளுகின்றன. இவ்வாறு மீன்பிடிக்கச்செல்லும் மீனவர்களுக்கு ஒவ்வொருநாளும் பெரும் சவால்கள் கொண்டதாக அமையும். சவால்கள் நிறைந்த இயற்கை இடர்பாடுடன் இலங்கை கடற்படையின் தாக்குதலுக்குள்ளாகும் அபாயத்தினையும் சமாளிக்க வேண்டியுள்ளது.

இதுபோன்ற காலங்களில் தடையில்லா தகவல்தொடர்பு தொழில் நுட்ப வசதிமுலம் கரையில் இருக்கும் அரசு அலுவலர்களை தொடர்பு கொண்டு உதவி கோர இயலுவதுடன் தங்கள் குடும்பத்தினரைத் தொடர்பு கொண்டு தங்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும் முடியும்.

இதனால் குடும்பத்தினரின் மனஉளச்சலையும், தேவையற்ற அச்சத்தினையும் தவிர்க்க இயலும். மேலும், புயல் மற்றும் வெள்ளக்காலங்களில் மீன்வளத்துறை அலுவலர்களால் அளிக்கப்படும் எச்சரிக்கை தகவல்களையும், மீனவர்களின் படகுகளுக்கு உடனுக்குடன் கொண்டு செல்ல இயலும். இதை தாயுள்ளத்தோடு உணர்ந்திருக்கின்ற, மனிதாபிமானம் கொண்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி **அம்மா** அவர்கள்

“ **கொடுமையும் வறுமையும்,**
**கூடையிலே வெட்டிவை .....**
**கொஞ்ச நஞ்ச பயமிருந்தால்**
**மூலையிலே கட்டிவை .......**
**நெடுங்கவலை தீர்ந்ததென்று**
**நெஞ்சில் எழுதி ஒட்டிவை....**

என்று மீனவ மக்களின் நெடுங்கவலையை தீர்த்து வைப்பதற்காக, கடந்த 5.4.2013 அன்று சட்டப்பேரவையில் விதி 110-ன்கீழ் கடலோர மீனவர்கள் பயன்பெறும் வகையில் தொழில் நுட்ப வசதிகள் பொருந்திய வி.எச்.எப் (Very High Frequency) மற்றும் எச்எப் (High Frequency) தொலை தொடர்பு சாதனங்களை 75 சதவீத மானியத்தில் வழங்க உத்திரவிட்டது ஒரு வரலாற்றுச் சாதனையாகும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

“ **மானாட மயிலாட** ” கண்டு மக்களை மறந்து களியாட்டம் போட்டவர்களுக்கு

“ **மீனாடும்**” கடல்வாழ்க்கையைப் பற்றி தெரிந்திருக்க வாய்ப்பில்லை. கடலே உன்னை நீ பாதுகாத்துக் கொள்,

ஏமாந்தால்,

உன்னைக்கூட பிளாட்போட்டு விற்றாலும் விற்பார்கள் என்று கூறும் அளவில்தான் இருந்தார்கள்.

**மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே,**

**“ செவிக்குணவு இல்லாத போழ்து சிறிது**

**வயிற்றுக்கும் ஈயப்படும் ”.**

என்ற வான்புகழ் படைத்த வள்ளுவனின் வாக்கிற்கிணங்க,

பசியைப் பொருட்படுத்தாது எனது உரையினை செவிமடுத்து, கேட்டுக்கொண்டிருக்கும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு முதலில் எனது நன்றியினை காணிக்கையாக்குகிறேன்.

**“இருந்திடலாம் நாட்டில் பல வண்ணக்கொடி**

**ஏத்தனையோ கட்சிகளின் எண்ணப்படி**

**பறக்கவேணும், எங்கும் ஒரே சின்னக்கொடி – அது**

**பஞ்சம் இல்லையெனும் அன்னக்கொடி. ”**

என பஞ்சத்தைப்போக்க வழிசொன்ன பொன்மனச்செம்மல் புரட்சித்தலைவர் அவர்களின் வாரிசான மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி **அம்மா** அவர்கள்,

**அம்மா உணவகத்** திட்டத்தினை நிறைவேற்றி, தமிழ்நாட்டில் அன்னக்கொடியினை பட்டொளிவீசி பறக்கச் செய்துள்ளார்.

**அறச்செல்வியாக விளங்கிய மாதரசி மணிமேகலை**

**அமுதசுரபியால் உணவு வழங்கி, பசியைப் போக்கியும்**

**பிணியைப்போக்க தனது தவத்தால் இறையருள் பெற்று**

**நோயாளிகளுக்கு பல உதவிகளைப் புரிந்ததாக**

**மணிமேகலை என்னும் இலக்கியம் நமக்கு எடுத்துக் காட்டுகிறது.**

இன்று மணிமேகலையே மறுவடிவம் எடுத்து வந்ததுபோல்
நம்மிடையே காட்சி தரும் மாண்புமிகு **அம்மா** அவர்கள்
பசியினைப் போக்கிட விலையில்லா அரிசியும்,
பிணியைப் போக்க ஒருங்கிணைந்த மருத்துவ வசதியும் தந்து,
காப்பிய மணிமேகலைப் போல் தமிழக மக்களை காத்து வருகிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

**நிரஞ்சனா நதியில் குளிக்கச்சென்ற புத்தர் பசியில் மயங்கி விழுந்தபோது**

**சுஜாதை என்கிற பெண் கொடுத்த சுவையான பால் சோறே அமிர்தம் ஆனது.**

அதுபோல், **அம்மா உணவகத்தில்** வழங்கப்படும் உணவு பல ஏழைகளுக்கு

அமுதமாக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

**"உணவே மருந்து, மருந்தே உணவு "** என்றார் திருமூலர்.

மீனில் உள்ள மருத்துவ குணங்கள் எண்ணில் அடங்காது.

இத்தருணத்தில் மருத்துவக் குணம் கொண்ட மீன் உணவு பற்றிய சிறு

குறிப்பினை இம்மாமன்றத்தில் தெரிவிப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

**சாளை மீனில்** உள்ள அயோடின் **கழுத்து கழலை** நோயைத்தடுக்கிறது.

**நெத்திலிமீனில்** உள்ள பொட்டாஷியம் **தசை செயல்பாடுகளை** அதிகரிக்கிறது.

**திலேப்பியா மீனில்** உள்ள செலனியம் **புற்று நோய்** வருவதைத்தடுக்கிறது.

**கெண்டை மீனில்** உள்ள துத்தநாகம் **சர்க்கரைநோயைக்**கட்டுப்படுத்துகிறது.

**கணவாய் மீனில்** உள்ள மக்னீஷியம் **மன அழுத்தத்தை** கட்டுப்படுத்துகிறது.

**பால்சுறா மற்றும் திருக்கை மீன் தாய்ப்பால் சுரப்பதை** அதிகரிக்கிறது.

**கெளுத்தி மீனில்** உள்ள துத்தநாகம் **நோய் எதிர்ப்பு** சக்தியை அதிகரிக்கிறது.

**ஆளி மீனில்** உள்ள தாமிரத்தில் **இன்சுலினைத்** தூண்டிவிடும் தன்மை உள்ளது.

**நண்டில்** இருக்கும் சோடியம் மற்றும் பாஸ்பரஸ் **ரத்த சிவப்பணுக்களை** அதிகரிக்கிறது.

மேலும், மீனில் உள்ள **ஒமேகா- 3** அமிலமானது

மூளையின் செயல்பாட்டை அதிகரித்து,

நினைவாற்றலை வளர்த்து,

ரத்தக்குழாயில் உள்ள அடைப்புகளை நீக்கி,

நரம்புகளின் செயல்பாட்டை அதிகரித்து,

நல்ல பார்வைத்திறனைக்கொடுத்து ,

உடம்பில் உள்ள கொழுப்பின் அளவைக்கட்டுப்படுத்தும்

சிறந்த அருமருந்தாக அமைகிறது.

மீனில் மருத்துவ குணங்கள் அதிகம் உள்ளது என்பதை இன்றைய ஆராய்ச்சியாளர்கள் மட்டுமல்ல. நம்முன்னோர்களான சித்தர்களும் தங்கள் பாடல்களின்மூலம், மீனின் மருத்துவ குணங்களை நமக்கு விளக்கியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே,**

**“ வெள்ளை வௌவால் தன்னை விரும்பி, நிதம் உண்பார்க்கு**

**தள்ளுகின்ற பித்தம் தரிக்குமோ—துள்ளி**

**வருங்கரப்பான் ஏகும். மயிலே புவியில்**

**அரும்பத்தியமாம் அறி ”.**

என்ற பாடல் மூலமும்,

**“ஆலைவாய்பித்தம் அணுகாதாம் அம்புவியில்**

**ஓலை வாளைக்கருவாடு உண்டக்கால்- காலப்**

**பசிதீபனமாம் கிதனைப்புகல் ”**

ஏன்ற பாடல்களின் வழியாக சித்தர்கள் தெரிவித்துள்ளார்கள்.

மீன் உணவின் மருத்துவ குணங்கள் பலவற்றில் ஒருசில வற்றையே இங்கு நான் கோடிட்டு காட்டியுள்ளேன். எண்ணற்ற பல மருத்துவக் குணங்கள் கொண்ட மீன்களைப் பற்றி மக்கள் அனைவரும் அறியும் வண்ணம், வருகின்ற **9-5-2013** அன்று, சென்னை தீவுத்திடலில் மீன் உணவுத்திருவிழா நடத்த முதன்முறையாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி **அம்மா** அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

**"உயிரைப் பணயம் வைத்து, முக்குளிப்பாய் மீன்பிடித்து,**
**அலைகடலில் எதிர் நீச்சல் போட்டு,**
**உழைத்து தேயும் இவர்கள்.......**
**வேலைக்குச் சோறு, விசனமில்லா வாழ்வு பெற**
**போராட்டகுரலின்றி, கோரிக்கை நிறைவேறி,**
**பாரினில் உயர"**

மாண்புமிகு பரட்சித்தலைவி **அம்மா** அவர்கள் அயராது சிந்தித்து

**" அன்னச் சத்திரம் ஆயிரம் வைத்தல்**
**ஆலயம் பதினாயிரம் நாட்டல்**
**அன்னயாவினும் புண்ணியங்கோடி**
**ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் "**

என்ற முண்டாசுக் கவிஞன் பாரதியின் வாக்கை மனத்திலிருத்தி மீன்வள மேம்பாட்டிற்கென கல்வி அறிவினை வழங்கிடும் வகையில் இந்திய கிழக்கு கடற்கரை மாநிலங்களிலேயே முதன்முறையாக தமிழ்நாட்டில் நாகப்பட்டினத்தில் மீன்வளப் பல்கலைக்கழகம் கண்டவர் மாண்புமிகு புரட்சித்தலைவி **அம்மா** அவர்கள்.

மேலும், மீன்வளத் துறையினை நவீனப்படுத்துவதற்கும், கடல்பொருட்கள் ஏற்றுமதியில் தமிழ்நாட்டை முன்னோடி மாநிலமாக உயர்த்திடவும் தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக் கழகத்தின் சார்பில், நாகப்பட்டினத்திலும், திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரியிலும் புதியதாக மீன்வளத் தொழில்நுட்ப நிலையங்களை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி **அம்மா** அவர்கள் கடந்த 20.02.2013 அன்று தங்கள் பொற்கரங்களால் தொடங்கி வைத்தார்கள்.

**மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே,**

**“ முக்குளித்து……**

**சிப்பியில் இருந்த முத்தை எடுத்து ……**

**மகுடத்தில் அலங்கரிப்பதுபோல் …….**

தமிழக மக்களின் ஆழ்ந்த நுண்ணறிவனை இன்று உலக அரங்கில் உயர்த்திவிட்டவர் மாண்புமிகு புரட்சித்தலைவி **அம்மா** என்றால் அது மிகையாகாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி **அம்மா** அவர்களின் ஆணைப்படி,

ரூ. 42 கோடி மதிப்பீட்டில் சென்னை சேத்துப்பட்டு ஏரியில் பொழுதுபோக்கு தூண்டில் மீன்பிடிப்பு மற்றும் பசுமைப் பூங்கா அமைத்தல்,

மகாபலிபுரத்தில் உலகத்தரம் வாய்ந்த மீன் காட்சியகம் அமைத்தல்,

உள்நாட்டு மீன் வளத்தை பெருக்கிடும் வகையில் மீன் குஞ்சு உற்பத்தி உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்,

மீன்வளர்ப்பினை ஊக்குவிக்க மானியம் வழங்குதல்,

நவீன மீன்அங்காடிகள் மற்றும் நடமாடும் மீன் உணவகம், போன்ற பல புதிய திட்டங்கள் வருங்காலத்தில் மிகவும் ஆக்கபூர்வமான பலனை அளிக்கும்.... இது நிரந்தரமாய் மக்களை வாழ்விக்கும் என்பது நூறு விழுக்காடு உறுதி.

**மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே,**

மீன்வளத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் பல்வேறு மீன்வளப் பணிகளை வணிக ரீதியில் மேற்கொண்டு வருகின்றது. நீர்த்தேக்க மீன்வளம், மீன் விற்பனை, மானிய விலையில் மீனவர்களுக்கு டீசல் மற்றும் மண்ணெண்ணை விநியோகம் போன்றவை மீன்வளர்ச்சிக் கழகத்தின் முக்கிய பணிகளாகும். மேலும், **1974** ஆம் ஆண்டு அரசு நிறுவனமாக ஆரம்பிக்கப்பட்ட இக்கழகம் முன்பு எப்போதும் இல்லாத வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி **அம்மா** அவர்கள் பொறுப்பேற்றவுடன், மேற்கொண்ட பல்வேறு தீவிர நடவடிக்கையின் காரணமாக, கடந்த **2011-2012** ஆம் ஆண்டில் ரூ. **4.11** கோடியும், **2012-2013** ஆம் ஆண்டில், ரூ. **5.4** கோடியும் நிகர லாபமாக ஈட்டியுள்ளது என்பதை பெருமகிழ்ச்சியுடன் மாண்புமிகு பேரவை உறுப்பினர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

அக்காலத்தில், முத்தெடுப்பவர்கள் உடலில் கயிறைக் கட்டிக் கொண்டு, கடலில் குதிப்பார்கள் அந்தக் கயிற்றின் மறுமுனையை, படகில் உள்ள அவரது மனைவியின் அண்ணன் அல்லது தம்பியின் கையில் பிடித்துக் கொள்ளக் கொடுப்பார்களாம். இப்பொழுது, தங்களைக் காப்பாற்ற, மாண்புமிகு புரட்சித்தலைவி **அம்மா** அவர்கள் இருக்கிறார்கள் என்ற காரணத்தால், மீனவர்கள் யாரும் கயிறைக் கட்டிக் கொண்டு முத்தெடுக்க கடலில் குதிப்பதில்லை.

**“ மக்களைப் புரிந்து ஆட்சி செய்வது வேறு.**
**மக்களைத் தெரிந்து ஆட்சி செய்வது வேறு.**
**இந்த இரு மாட்சிமைகளை உணர்ந்து,**
**அறிவு சார்ந்து ஆட்சி செய்துக் கொண்டிருப்பவர்”**

நம் இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி **அம்மா** அவர்கள்தான்.

மாண்புமிகு புரட்சித்தலைவி **அம்மா** அவர்களின் பாசக்கரங்களில் மீனவ மக்கள் எப்பொழுதும் பாதுகாப்புடன் இருக்கிறார்கள் என்று கூறி, மாண்புமிகு **அம்மா** அவர்களின் மலர் பாதங்களை வணங்கி, இத்துறைக்கான புதிய அறிவிப்புகளை உங்கள் அனுமதியோடு அறிவிக்கிறேன்.